BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர எதிர்காலத்திற்கான மாற்றம் ஏற்படுத்தவும் அதனை பத்திரப்படுத்தவும் தேவையான நிதி ஒதுக்கீடு வேண்டி, கூட்டாண்மை மற்றும் மாகாண அரசுகளிடம் நகர நிர்வாகம் வாதாடுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 11, 2021) – On Friday, மார்ச் 12 வெள்ளிக்கிழமையன்று ப்ராம்ப்ட்டன் நகர மேயராகிய பேட்ரிக் பிரவுன் அவர்கள் ப்ராம்ப்ட்டன் நகர எம் பிக்கள் மற்றும் மாகாண எம்பிக்களிடம் மெய்நிகர் முறையில் சந்திக்கவிருக்கிறார்; இது முக்கியமான முன்னுரிமை கொண்ட விஷயங்கள் மற்றும் நகரின் எதிர்காலத்திற்கான மாற்றம் ஏற்படுத்தி அதனை பத்திரப்படுத்துவதற்காகவேயாகும்.

கோவிட்-19 தொற்று பரவலானது, ப்ராம்ப்ட்டன் நகரின் முக்கிய முன்னுரிமைகொண்ட விஷயங்களாகிய சுகாதாரப் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் பொருளாதார மீட்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது. கூட்டு மற்றும் மாகாண அரசுகளின் பட்ஜெட் ஆலோசனைகளின் மூலமாக, நெருக்கமான கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பைக் கோரும் அதே வேளையில், நகரத்தின் உடனடி மற்றும் நீண்டகால தேவைகளைப் பாதுகாக்க சரியான நேரத்தில் மற்றும் சமமான நிதியுதவி வேண்டி ப்ராம்ப்ட்டன் நகரம் வாதிடுகிறது.

நகரின் பாதுகாப்பான மறுதொடக்க ஒப்பந்தத்தை 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை நீட்டிக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் சமீபத்தில் கோரியது; அத்துடன், நகராட்சி பேருந்து போக்குவரத்து அமைப்புகளுக்கு உதவ கூடுதல் நிதியுதவியாக சமீபத்தில் $150 மில்லியன் ஒதுக்கியதற்காக மாகாண அரசினை பாராட்டுகிறது. இதன் விளைவாக டிசம்பர் 31, 2021 வரை நகராட்சிகளுக்கு மொத்தம் $650 மில்லியன் நிதி இன்னமும் கிடைக்கிறது; இது அந்தந்த நிகழ்வின் அடிப்படையில் , டிசம்பர் 2022 வரை நீட்டிக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டில் பத்திரப்படுத்தப்பட்ட கூட்டாட்சி நிதியைக் கொண்டு, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, வேலை வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய புதிய பசுமை உள்கட்டமைப்பு பேருந்து போக்குவரத்து திட்டங்களுக்கான முதலீடுகளைக் கோருகிறது; இது புதிய பேருந்து போக்குவரத்து பராமரிப்பு மற்றும் சேமிப்பு வசதி, அதற்கான மின்மயமாக்கல் மற்றும் பூஜ்ஜியம் உமிழ்வு கொண்ட பேருந்துகள் வாங்க உதவுவதுடன் பசுமை இல்லம் நோக்கிய வாயு உமிழ்வையும் குறைக்கிறது.

ஒன்ட்டேரியோவின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், ப்ராம்ப்ட்டனின் சுகாதாரப் பராமரிப்புக்கான இடைவெளியைக் குறைப்பதற்கான உடனடி மாகாண நிதி என்பது, பல்வேறு வகையான சுகாதார சேவைகளுக்கு முக்கியமானதாகும், இவை உள்படட: நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாடு; சமூகம் மற்றும் பொதுமக்களுக்கான சுகாதார திட்டங்கள்; வீட்டு பராமரிப்பு; மற்றும் ப்ராம்ப்ட்டன் பொது மருத்துவமனை மற்றும் ஒருங்கிணைந்த உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான பீல் நினைவு மையத்தில் மருத்துவமனை சேவைகள்.

- 

700,000 க்கும் அதிகமான குடியிருப்பாளர்களைக் கொண்ட, ப்ராம்ப்ட்டன் நகரமானது மக்கள் தொகை வகையில் கனடாவில் விரைவாகவும் பலதரப்பினரும் பல்கிப்பெருகும் ஒன்பதாவது பெரிய நகரமாகும். தொழில்நுட்பம் மற்றும் புதுமை சார்ந்த தொழில்களில் திறனை வளர்ப்பதற்கான வேலை வாய்ப்பு வளர்ச்சி பொருத்தவரையில் ப்ராம்ப்ட்டன் நகரத்திற்கு திறன் மேம்பாடு என்பது இன்னமும்கூட முக்கிய ஒரு முன்னுரிமை கொண்ட விஷயமாக உள்ளது.

பட்ஜெட்டுக்கு முந்தைய வேண்டுகளில் அடங்குபவை:

பிராம்ப்டனில் "வெராந்தாவில் வைத்து மருத்துவம் பார்ப்பது" என்பதை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருதல் மற்றும் சுகாதார பராமரிப்புக்கான சமமான மாகாண நிதிவழங்கல்

- டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் நகரத்தை விரைவில் திறந்து நிலையான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்க ரிவர்வாக் திட்டத்திற்கான மாகாண நிதிவழங்கல்
- மின்சார பேருந்து போக்குவரத்து வாகனங்களுக்கான மூன்றாவது போக்குவரத்து பராமரிப்பு மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிக்கான கூட்டாட்சி நிதி
- குயின் ஸ்ட்ரீட் பிஆர்டி (Queen Street BRT ) திட்டத்தில் முதலீடு செய்வதன் மூலம் பிராந்தியங்களுக்கு இடையிலான, ஒரு உயர்-ரக போக்குவரத்து நெட்வொர்க்கிற்கான ஆதரவு
- சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆய்வு முடிவடையும் தருணத்தில், ஹூரோன்ட்டோரியோ-மெயின் ஸ்ட்ரீட் எல்ஆர்டி நீட்டிப்பில் முதலீடு
- GO டிரான்ஸிட் ரெயில் போக்குவரத்து விரிவாக்கம் மற்றும் மெட்ரோலின்க்ஸுடன் (Metrolinx) இரு வழி சேவையை நாள் முழுவதும் நீட்டிப்பதற்கான நிதியளித்தல்
- ப்ராம்ப்ட்டன் பல்கலைக்கழக சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ப்ராம்ப்ட்டன் – யூ (BramptonU ) வை நிறுவுவதற்கான மாகாண சட்டம்; மற்றும் இரண்டாம் நிலை கல்விக்கு அடுத்த நிலை கல்வி மற்றும் சிக்கலான புதுமை படைப்பு மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்கான முதலீடுகள்

பட்ஜெட்டுக்கு முந்தைய வேண்டுகோள்களைப் படிக்க, இங்கு க்ளிக் செய்யவும்

**அறிஞர் கூற்றுக்கள்**

“நமது  அரசாங்க கூட்டாளிகளிடம் கிடைக்கின்ற அதிகரித்த ஒத்துழைப்பு நாம் கூட்டாக மீட்சி பெற துணைபுரியும். COVID-19 தொற்றுபரலானது, ஒன்ராறியோவின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது, ப்ராம்ப்ட்டனின் சுகாதாரப் பாதுகாப்பு இடைவெளியைக் குறைப்பதற்கு தேவையான  சமமான நிதியுதவியை அதுவும், சரியான நேரத்தில்  கிடைக்க  வேண்டிய முக்கியமான தேவையை தீவிரப்படுத்தியுள்ளது. இதனால்தான் நாங்கள் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு ஏற்றபடி, மாகாணத்திற்கு  ஒரு புதிய அதிதீவிர பராமரிப்புக்கான மருத்துவமனை மற்றும் ஒரு மருத்துவப் பள்ளிக்காக வாதாடுவோம்.
எங்கள் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு முக்கியமானது என்பதை உறுதி செய்ய, அணுகக்கூடியதும் மற்றும் நிலையானதுமான பொது போக்குவரத்து நம்மிடம்  இருப்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம். ப்ராம்ப்ட்டனில் உள்ள மின்சார போக்குவரத்து வாகனங்களுக்கான போக்குவரத்து பராமரிப்பு மற்றும் சேமிப்பு வசதியை மின்மயமாக்குவதில் அவர்களின் ஆதரவு எவ்வளவு முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டும் விதமாக  இதை எங்கள் கூட்டாட்சி அரசுகளிடம் கொண்டு சேர்ப்போம். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரமானது  நாட்டின் இளைய மற்றும் மிகவும் பலதரப்பட்ட மக்கள் கொண்ட நகரங்களில் ஒன்றாகும். GTHA திறமைத் தொகுப்பு  மற்றும் சந்தைகளை அணுக தயாரான தன்மையுடன் புதுமை படைக்கும் காரிடாரின்  மையமாக அமைந்துள்ளது; இது அபிவிருத்தி செய்யக்கூடிய நிலங்கள் கிடைப்பதோடு , வணிகங்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் கவர்ச்சிகரமானதாகவும் அமைந்திருக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரமானது நமது  கூட்டு மற்றும் மாகாண அரசுகளுடன்  தொடர்ச்சியான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது; இந்த எதிர்பார்ப்பானது,  எங்கள் நகரத்துக்காக, ஒன்ட்டேரியோவுக்காக மற்றும் கனடாவுக்காக இந்த பத்தாண்டுகளை  மறுவரையறை செய்வதற்கேயாகும். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக்

கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
குர்வீந்தர் சிங்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-2028 | Gurvinder.A.Singh@brampton.ca